# இயல் 7.4 - நேர் மற்றும் எதிர் விகிதங்கள்

பயிற்சி எண் :: 7.4.1.1.A

நேர் மற்றும் எதிர் விகிதங்கள் - வரையறை

## நேர் மற்றும் எதிர் விகிதங்கள் - வரையறை

ஒரு பொருளில் ஏற்படும் மாற்றம் அதனுடன் தொடர்புடைய வேறு ஒரு பொருளில் இரு விதமான மாற்றங்களை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. அவை;

1. இரு அளவுகளும் ஒரே சீராக அதிகரித்தல் அல்லது குறைதல். இதனை நாம் இரு அளவுகளும் **நேர் விகிதத்தில் அமைந்துள்ளன** என்கிறோம். உதாரணம் →

   (A) ஒரு பேனாவின் விலை ₹15, இரண்டு பேனாக்களின் விலை ₹30 . . .

   (B) 5 ஏக்கர் நிலத்தில் நெல் விதைப்பதற்கு 10 கிலோ விதை நெல் தேவைப்படுகிறது, 10 ஏக்கர் நிலத்தில் நெல் விதைப்பதற்கு 20 கிலோ விதை நெல் தேவைப்படும்.

   (C) ஒரு நாள் குமரன் அவன் வியாபாரத்தில் ஈட்டிய இலாபம் ₹500, 4 நாட்களில் அவன் ஈட்டிய இலாபம் ₹2,000 . . .

   (D) அன்புமணிக்கு ஒரு சட்டை தைப்பதற்கு 1 மீட்டர் துணி தேவைப்படுகிறது, 5 சட்டை தைப்பதற்கு 5 மீட்டர் துணி தேவைப்படும்.

2. முதல் அளவு கூடும் பொழுது இரண்டாம் அளவு குறைதல் அல்லது முதல் அளவு குறையும் பொழுது இரண்டாம் அளவு அதிகரித்தல். இதனை நாம் இரு அளவுகளும் **எதிர் விகிதத்தில் அமைந்துள்ளன** என்கிறோம். உதாரணம் →

   (A) ஒரு வேலையை 10 ஆட்கள் வேலை செய்து 2 நாளில் முடிக்கிறார்கள். அதே வேலையை 20 ஆட்கள் வேலை செய்தால் ஒரே நாளில் முடிப்பர்.

   (B) முத்துமாரியிடம் ₹1000 உள்ளது. ஒரு நாளைக்கு ₹200 வீதம் செலவழித்தால் அது அவருக்கு 5 நாட்களுக்கு வரும். அதேசமயம், அவர் ஒரு நாளைக்கு ₹100 வீதம் செலவழித்தால் அது 10 நாட்களுக்கு வரும்.

   (C) உதயகுமாரின் கிராமத்தில் உள்ள பொது நீர்த்தொட்டியில் தினமும் 100 குடங்கள் வீதம் தண்ணீர் பிடித்தால் 6 நாட்களுக்குப் பிடிக்கலாம், ஆனால், 200 குடங்கள் வீதம் தண்ணீர் பிடித்தால் 3 நாட்களுக்குத்தான் பிடிக்க இயலும்.

   (D) குணசேகரனின் விளை நிலத்தை 1 Tractor கொண்டு உழுவதற்கு 3 மணி நேரம் ஆகிறது. ஆனால் அதே வேலையை 3 Tractor கொண்டு உழுதால் 1 மணி நேரத்தில் முடித்து விடலாம்.


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Wednesday 3rd August, 2022 :: 05:17 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

**V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.**
**https://ramaswamychellammaltrust.org** § **info@ramaswamychellammaltrust.org**

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**